# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No.64/2025** |
| Deposition of witness | : | P.W.2 |
| Name | : | சுமித்ரா |
| Father's /Husband Name | : | ஜேம்ஸ் |
| Village | : | எட்டியலூர் |
| Taluk | : | திருவாரூர் |
| Age | : | 40 |
| Occupation | : | விவசாய வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 05th day of August 2025.
A1, A2 present.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது எட்டியலூரில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 சௌமியா எனது 2வது மகள். அவரை திருகண்ணபுரம் பிரபாகரன் என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்துள்ளேன். இந்த ஆண்டு 23 ம் தேதி மாதம் சரியாக நினைவில்லை. சுமார் ஐந்து மாதங்களுக்கு முன்பு எனது மகள் சௌமியாவை அவரது கணவர் எனது மகள் சௌமியா கர்ப்பமாக இருப்பதால் எனது வீட்டில் கொண்டு வந்து விட்டுள்ளார். நான் அன்றைய தினம் வேலைக்கு சென்றுவிட்டு 05.00 மணிக்கு வேலை முடித்து வீட்டிற்கு வந்தேன். ஆஜர் எதிரிகள் இருவரும் எனது மகள் அ.சா.1 சௌமியா கொல்லையில் குளித்துக்கொண்டிருந்தவரை பிடித்து இழுத்துக்கொண்டு ரோட்டில் போட்டு பாவாடையை கிழித்துவிட்டார்கள். 1வது எதிரி மணிகண்டன் குச்சிகாரி, தேவடியா என அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார். 1வது எதிரி எங்களை பார்த்து உங்கள் உயிர் என் கையில் தான் உள்ளது என்று மிரட்டினார். அவ்வாறு மிரட்டியதால் எனக்கு பயம் வந்தது. எனக்கு 3 பெண் குழந்தைகள் இருப்பதால் எதிரிகளால் ஏதும் ஏற்படும் என்று பயமாக உள்ளது. எனது மகள் அ.சா.1ஐ சிகிச்சைக்காக 108

ஆம்புலன்ஸ் மூலமாக திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து போய் சேர்த்தேன். குடவாசல் போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் நான் வேலைக்கு சென்றுவிட்டேன் என்றால் சரிதான். நடந்ததாக சொல்லப்படும் சம்பவத்தை நான்நேரிடையாக பார்க்கவில்லை என்றால் சரிதான். எனது கணவர் சுந்தர் என்பவரிடம் வேலை பார்த்து வருகிறார் என்றால் சரிதான். சுந்தர் என்பவரும் நாங்கள் மற்றும் எதிரிகள் வெவ்வேறு சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். அடிக்கடி சமூக ரீதியாக எங்களது ஊரில் பிரச்சனைகள் நடப்பது வழக்கம் என்றால் சரிதான். சுந்தரின் தூண்டுதலின் பேரில் தான் சமூக ரீதியாக எதிரிகளை பழி வாங்க வேண்டும் என்பதற்காக ஊரில் இருந்த எனது மகளை வரவழைத்து அவளை ஒரு கருவியாக பயன்படுத்தி அதனை அனுசரித்து நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னை அசிங்கமாக திட்டியது குறித்தும் எனது வீட்டில் நான் வாழ்வதற்கு பயமாக இருக்கிறது என்று குறித்து நான் போலீசார் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறவில்லை. நான் முதல் விசாரணையில் கூறிய விபரங்கள் போலீசார் விசாரணையில் கூறாமல் வழக்கினை பலப்படுத்த வேண்டும் என்பதற்காக மிகைப்படுத்தி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் எனது வீட்டை அடித்து உடைத்து சேதப்படுத்திய விபரத்தை போலீசார் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறினேன். அதனை போலீசார் படம்பிடித்து கொண்டார்கள் என்றால் பிடித்துக்கொண்டார்கள். இந்த விபரம் வழக்கை மிகைப்படுத்தி கூறிய விபரம் என்றால் சரியல்ல. நான் கூறுவது போல் எதிரிகள் எவ்விதமான குற்ற செயலிலும் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கு எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.08.05 12:53:05 +05'30'

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.